# கிட்டு உள்ளரங்கத்தை Royal அணியினர் தமதாக்கினர்

கேனல் கிட்டு 10 வீரவேங்கைகளின் 13வது ஞாபகார்த்த உள்ளரங்க உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 11.01.2009 Lyss Sportplatz Grien உள்ளரங்கத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. சிவபாலன் அவர்கள் ஈகைச்சுடரினை ஏற்றிவைக்க அதனைத்தொடர்ந்து நகுலன் அவர்களின் அக வணக்கத்துடன் போட்டிகள் ஆரம்பமாகின. சுவிஸிலுள்ள 21 கழகங்கள் இப்போட்டியில் கலந்துகொண்டன.

அரை இறுதிப்போட்டியே இச்சுற்றுப் போட்டியில் மிகச்சிறப்பான போட்டிகளாக அமைந்தன. Royal A அணியினர் மிகச்சிறப்பாக ஆடி Young Star அணியினரை 2 - 0 என்ற ரீதியில் தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர். ஏற்கனவே Royal A அணியினர் Win Boys அணியினரை 1 - 2 என்ற ரீதியிலும், Young Birds அணியினரை 2 - 0 என்ற ரீதியிலும் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மற்றைய போட்டி Royal, Young Star A அணிகளிற்கிடையில் நடைபெற்றது. ஆரம்பம் முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக அமைந்த இப்போட்டி 1 - 1 என்ற நிலையில் சமநிலை எய்தியது. போட்டி முடிவை தீர்மானிக்கும் பனால்டி (penalty) உதையில் 5 - 4 என்ற ரீதியில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகினர்.

Young Star A அணியினர் Win Boys அணியினரை 2 - 1 என்ற ரீதியிலும், Kick Boys அணியினரை 1 - 0 என்ற ரீதியிலும் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இறுதிப்போட்டி Royal, Royal A அணிகளிற்கிடையில் நடைபெற்றது. ஒரே அணியைச் சேர்ந்த இரு அணிகள் கேனல் கிட்டு உள்ளரங்க இறுதிப்போட்டியில் கலந்து கொண்டமை ஒரு சாதனையாகவே கருதப்பட்டது.

## போட்டி முடிவுகள்

**1 Royal**

**2 Royal A**

**3 Young Star A**

**சிறந்த வீரர் : நிரூபன் (Young Star A)**

**சிறந்த கோல் காப்பாளர் : சங்கர் (Royal A)**

**ஆட்டநாயகன் : கௌசிகன் (Gowseegan) (Royal)**

**அதிக கோல்கள் அடித்த வீரர் : நிமல்ராஜ் (Young Star)**

**சிறந்த கழகம் : Royal A**

## சுவிசில் நடைபெற்ற கேணல் கிட்டு உள்ளிட்ட 10 வீரவேங்கைகளின் நினைவாக நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நிகழ்வின் படத்தொகுப்பு












15














16












SC ROYAL
BERN